செ.வெ.எண்:02/ஜூன் நாள்:02.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## மீன்வளத் துறையின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், மீன்பிடி கிராமங்களான தங்கச்சிமடம், முகுந்தராயர்சத்திரம் ஆகிய கிராம பகுதிகளில் இன்று (02.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் மீன்வளத்துறையின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலோரப்பகுதிகளில் அமைந்துள்ள மீனவ கிராமங்களில் வசிக்கும் மீனவர்கள் பயன்பெற ஏதுவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் 15.07.2015 அன்று சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சியின் வாயிலாக இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தங்கச்சிமடம், முகுந்தராயன்சத்திரம், பாம்பன், டி.மாரியூர், வேதாளை மற்றும் தனுஷ்கோடி ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.44.70 கோடி மதிப்பில் மீன்பிடி இறங்குதளம் அமைத்திட அடிக்கல் நாட்டினார்கள். அதனைத் தொடர்ந்து மீன்வளத்துறையின் சார்பாக அந்தந்த கிராமங்களில் மீன்பிடி இறங்குதளங்கள் அமைப்பதற்கான பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் இன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தங்கச்சிமடம் கிராமத்தில் ரூ.9.90 கோடி மதிப்பிலும், முகுந்தராயர் சத்திரம் கிராமத்தில் ரூ.7.10 கோடி மதிப்பிலும் , தனுஷ்கோடி கிராமத்தில் ரூ.8 கோடி மதிப்பிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் மீன்பிடி இறங்கு தளம் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் தங்கச்சிமடம் மீன்பிடி இறங்குதளத்தில் 63 சதவீத கட்டுமானப் பணிகளும், முகுந்தராயர் சத்திரம் மீன்பிடி இறங்குதளத்தில் 68 சதவீத கட்டுமான பணிகளும், தனுஸ்கோடி மீன்பிடி இறங்குதளத்தில் 17 சதவீத கட்டுமான பணிகளும் நிறைவேற்றப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. கட்டுமான பணிகளை விரைவாக மேற்கொண்டு காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மீன்வளத்துறை அலுவலர்களுக்கு அறிவுரை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.

தொடர்ந்து தங்கச்சிமடம் கிராமத்தில் மீன்வளத்துறையின் சார்பாக மாநில சமச்சீர் நிதித்திட்டத்தின் கீழ் ரூ.99.70 இலட்சம் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வரும் மிதவை கூண்டு மீன் வளர்ப்பினையும் (Cobia Fishes), இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் ரூ.1.80 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் மீன்வளத்துறையின் ஒருங்கிணைந்த அலுவலக கட்டிடத்தின் கட்டுமான பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மீன்வளத்துறை துணை இயக்குநர் திரு.எம்.காசிநாத பாண்டியன், உதவி இயக்குநர் திரு.கோபிநாத், உதவி செயற்பொறியாளர் திரு.தர்மராஜ் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**